| | | | |
|---|---|---|---|
| දුරකථන / தொலைபேசி / Telephone | ) 0112669192 ,0112675011 / 0112698507 , 0112694033 / ) 0112675449 ,0112675280 | මගේ අංකය / எனது இல / My No. | ) / ) / )CF/EXW/11/2024 |
| ෆැක්ස් / பெக்ஸ் / Fax | ) 0112693866 / ) 0112693869 / )0112692913 | ඔබේ අංකය / உமது இல / Your No. : | ) / ) / ) |
| විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் முகவரி / e-mail | )postmaster@health.gov.lk / ) | දිනය / திகதி / Date | ) / )2024/05/02 / ) |
| වෙබ්අඩවිය / இணையத்தளம் | ) www.health.gov.lk | | |

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
Ministry of Health


பொது சுற்றுநிருப கடித இலக்கம் : 02 – 71/2024

மாகாண சுகாதார செயலாளர்கள்,

பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை, கொழும்பு,

பணிப்பாளர் தேசிய வைத்திய சாலை கண்டி,

மத்திய அமைச்சின் கீழ் வரும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,

மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,

பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,

உரிய நிறுவனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்.

**சுகாதார அமைச்சில் நிறைவேற்று சேவைப் பிரிவு SL - 01 - 2006 சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட அலுவலர் பதவிகளின் பொருட்டான மூன்றாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2024 (முதலாவது தடவை)**

சுகாதார அமைச்சில் நிறைவேற்று சேவைப் பிரிவு SL - 01 - 2006 சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட அலுவலர்கள் தரம் I யிற்கு பதவி உயர்வு பெற்று 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தியடைய வேண்டிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை **2024.07.07** ஆம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது. பரீட்சை நடைபெறும் திகதி, நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும்.

**02** தகைமைகள்

சுகாதார அமைச்சில் நிறை வேற்று சேவைப் பிரிவு SL - 01 - 2006 சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட அலுவலர் / பிரதான சட்ட அலுவலர் பதவியின் தரம் I இற்கு நியமனம் பெற்றுள்ள உத்தியோகத்தர்களும், இதுவரை இப்பரீட்சையை பூரணப்படுத்தியிராத உத்தியோகத்தர்களும் மாத்திரம் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

**கவனிக்கவும் : 2024.06.03ம் திகதியன்று தரம் I இற்கு நியமிக்கப்பட்டு அதற்கான நியமனக்கடிதம் கிடைக்கப்பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களை மாத்திரம் எனக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளவும். (தரம் I ற்கு நியமிக்கும் நியமனக் கடிதத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டியது கட்டாயமாகும்)**

**03** விண்ணப்பங்கள்

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக பணிப்பாளர் (பரீட்சைகள்) , சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய" , இலக்கம் - 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்னும் முகவரிக்கு **2024.06.03** திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயரை **"சட்ட அலுவலா (SL - 01 – 2006) மூன்றாவது வினைத்திறமைகாண்தடைப் பரீட்சை – 2024 (முதலாவது தடவை)"** என குறிப்பிடுதல் வேண்டும். **இவ்வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என்பதை தனிநபர் கோவைகளை பேணும் உத்தியோகத்தரும், விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத் தகவல்களும் சரியானவை என்பதை நிறுவன தலைவரும் சான்றுப்படுத்துதல் கட்டாயமாகும்.** தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா.110 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட (9"× 4") அளவுடைய கடித உறை 1 இணையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ, அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பிவைக்க வேண்டும். **விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் சரியாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள், உரியமாதிரிப் படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.**

விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டும். முதலாவது பக்கத்தில் 01 - 04 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 05 - 08 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

**04** பரீட்சைக் கட்டணம்

4.1 முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

4.2 எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

**05** பரீட்சையின் பொருட்டு உட்படுத்திக் கொள்ளுதல்

5.1 ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.2 பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பொருட்டு பரீட்சைக் குழுவின் தலைவருக்கு தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பபிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை
(இ) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ) செல்லுபடியான கடவுச் சீட்டு

**06** பரீட்சை திட்டம்

இந்த பரீட்சையானது முகாமைத்துவம் தொடர்பான பரிசீலனையை கொண்டமைந்த எழுத்துமூல பரீட்சையாகும். நேரம் 03 மணித்தியாலங்கள். சித்தியடைவதன் பொருட்டு ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

**07** பரீட்சை பாடத்திட்டம்

**7.1** முகாமைத்துவம்

இந்த வினாத்தாள் கட்டுரை வடிவிலான வினாக்கள் 08 ஐ கொண்டுள்ளது. அதில் ஏதாவது 05 வினாக்களுக்கு விடையளிக்குக.

பாடத்திட்டம்

01. முகாமைத்துவ அடிப்படை தத்துவங்கள் (Management Principles)
02. முகாமைத்துவ தொழிற்பாடுகள் (Management Functions)
03. பங்கேற்பு முகாமைத்துவம் (Participative Management)
04. முகாமைத்துவ சூழல் (Management Environment)

**08** பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவிசெய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09 தயவு செய்து இச்சுற்று நிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை உங்களது நிறுவனத்தில் கடமையாற்றும் சட்ட அலுவலர் தரம் ll(கு பொருத்தமான சகல உத்தியோகத்தர்களுக்கும் அறியத் தரவும். இந்த விபரங்களை www.health.gov.lk என்னும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**கவனிக்கவும் :- சிங்களம், தமிழ், ஆங்கில சுற்று நிருபங்களில் ஏதாவது ஒவ்வாமை காணப்படுமிடத்து சிங்கள மொழியிலான சுற்று நிருபமே வலுவுடையதாகும்.**

சாமிக எச். கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II
செயலாளருக்காக.

EXW

LO Grade I

| அலுவலக உபயோகத்தின் பொருட்டு |
|---|
| |

மாதிரி விண்ணப்பப் படிவம்

**சுகாதார அமைச்சில் நிறைவேற்று சேவைப் பிரிவு SL - 01 - 2006 சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட அலுவலர் பதவிகளின் பொருட்டான மூன்றாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2024 (முதலாவது தடவை)**

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில் எழுதவும்)

..........................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில கப்பிட்டல் எழுத்தில்)

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் ( தமிழில்) ..........................................................................................

..........................................................................................................

(iv) முதலெழுத்துக்களுடன் பெயர்( ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) தரம் I ற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட திகதியும் கடித இலக்கமும் :

திகதி : ..........................................................................................

குடித இலக்கம்: ..........................................................................................

(தரம் I ற்கு உயர்த்தம் கடிதத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைக்குக)

(ii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம் : ..........................................................................................

(iii) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

(iv) தேசிய அடையாள அட்டை இல :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

(v) மின்னஞ்சல் முகவரி :..........................................................................................

02. (அ) தற்போது சேவைபுரியும் நிலையம் ( தமிழில்) ..........................................................................................

(ஆங்கிலத்தில்)..........................................................................................

(ஆ) அதற்குரிய மாவட்டம் ..........................................................................................

(இ) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது மத்திய அரசினால் ☐ மாகாண சபையினால் ☐

(ஈ) மாகாண சபையாயின் உரிய மாகாணம் ..........................................................................................

(உ) பரீட்சை அனுமதி அட்டையினை அனுப்புவதன் பொருட்டு பிழையின்றி தெளிவாக தங்களுடைய முகவரி எழுதப்பட்ட 9" X 4" அளவுடைய, ரூபா 110.00 பெறுமதியுடைய முத்திரையொட்டப்பட்ட கடித உறைகள் 01 விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா? ..........................................................................................

(ஊ) (i) தபால் முகவரி (தமிழில்) ..........................................................................................

..........................................................................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்) ..........................................................................................

03. பரீட்சைக்குத் தோற்றும் மொழி ( சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) ..........................................................................................

04. (அ) இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு தோற்றியுள்ளீர்களா? ..........................................................................................

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இம்முறை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா?

| முத்திரைக்கூண்டு |
|---|
| |

05. **விண்ணப்பதாரியின் சான்றிதழ்**

(i) எனது அறிவிற்கும், விசுவாசத்தின் அடிப்படையிலும் இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், இப் பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன்முறையான படியால் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் / முதன் முறை அல்லாத படியால் ரூபா…………பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ள தெனவும், இவ்விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பு நீக்கம் செய்வதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதாரத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பாக நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ………………………………

………………………………………………
விண்ணப்பதாரரின் கையொப்பம்

---

06. **தனிநபர் கோவையினை கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இப்பரீட்சையில் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் விண்ணப்பதாரி கொண்டுள்ளார் என்றும், இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………………
பெயர்

………………………………………………
பெயரும் கையொப்பமும், திகதியும்.

---

07. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருமதி/செல்வி* ……………………………………………… என்பவர்……………… உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் பணிபுரிகின்றார் என்றும் அவ் உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக உள்ளதால் / முதன் முறையாக இல்லாத* படியால் ரூபா …………….. பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் / முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை* எனவும், விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் , எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ………………………………

………………………………………………..
நிறுவனத் தலைவரின் கையொப்பம்

---

08. **பன்முகப்படுத்தப்பட்ட /விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர் / திருமதி / செல்வி ……………………………………………… என்பவர் …………………………….. உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகுதி உள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ………………………………

………………………………………………
பன்முகப்படுத்தப்பட்ட பகுதி /விசேட பிரிவு
தலைவரின் கையொப்பம்
இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்.

*தேவையற்ற பகுதிகளை கீறிவிடவும்